யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 20 வியாழக்கிழமை 03-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 134

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1895)

## எரிக்சோல் - ஜனாதிபதி நேற்றும் சந்திப்பு
## புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அரசு சம்மதம்

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்புக்கு வந்திருந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை இரண்டாவது தடவையாக நேற்று மாலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கடந்த திங்கள்கொழும்பு வந்து சேர்ந்த தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் வந்த கையோடு ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். ஜனாதிபதியுடன் நேற்று மாலை இரண்டாவது தடவையாக இடம்பெற்ற பேச்சுவார்த் (8ம் பக்கம் பார்க்க)

## பரராஜசிங்கம் அவுஸ்திரேலியா பயணம

(கொழும்பு)
தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், இரு வார கால அரசியல் விஜயமாக நேற்று அவுஸ்திரேலியாவுககு பயணமா (8ஆம் பக்கம் பார்க்க)

## மாவனல்லயில் இனக் கலவரம்
# சிங்கள - முஸ்லிம் மக்கள் மோதல்
# இருவர் பலி; ஐந்து பேர் காயம்

## பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்
## ஊரடங்குச் சட்டம் அமுல்

கேகாலைமாவட்டத்தில் உள்ள மாவனல்லநகரில் முஸ்லிம்மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே நேற்று இடம்பெற்ற மோதல்சம்பவங்களின் போது இருவர் கொல்லப்பட்டும் ஐந்துபேர் காயமடைந்துமுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது இரண்டு எரிபொருள் விற்பனை நிலையம் உட்பட சுமார் 40க்கும மேற்பட்டகடைகள்எரிக்கப்பட்டும்,5க்குமேற்பட்ட வாகனங்கள் சேதமாக்கப்பட்டுமுள்ளன- இதனை அடுத்து அங்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணிக்கும் வகையில் மாவனல்ல நகரைஅண்டிய ப்குதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம் மக்களிடையே நேற்று இடம் பெற்ற மோதல் சம்பவம்பற்றிதெரிய வருவதாவது, கடந்த திங்கட்கிழமை சிங்களவர் சிலர் முஸ்லிம்களின் கடைகளுக்குச் சென்றுகப்பம்கேட்டனர். இதனையடுத்து ஏற்பட்ட வாக்குவாதத்தின் போதுகப்பம்கேட்டசிங்களவர்கள்முஸ்லிம்களை சண்டபாட்டில் தாக்கினர்.

இதனை அடுத்து தம்மை தாக்கியவர்களை கைது செய்யுமாறு கோரி நேற்றுக்காலை முஸ்லிம்கள் ஊர்வலம்நடாத்தினர் இதன்போதுபொலிசார் கண்ணீர் புகைப் பிரயோகம் செய்யநேரிட்டது இதனையடுத்து மூண்ட சண்டையின் போது பொலிசார் துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

இதனால் இருவர்கொல்லப்பட்டும் 5பேர்காயமடைந்தும் (8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்- படையினர் பூவரசங் குளத்தில் கடும் மோதல்

மன்னார் வீதியில்இராணுவத்தினருக்கும்.விடுதலைப் புலிகளுக்குமிடையேகடும மோதல் சம்பவம் ஒன்று நேற்று மாலை இடம் பெற்றதாகவன்னிச் செய்திகள தெரிவித்துள்ளன.

மன்னார் வீதியில் பூவரசங் குளத்திற்கு அருகாமையிலேயே இம்மோதல சம்பவம் இடம் பெற்றுள்ளது இச் சம்பவத்தின் போது மோட்டார் ஷெல்தாக்குதல்கள் பரஸ்பரம் மேற் → 8ஆம் பக்கம் பார்க்க

## நிலைமையை கட்டுப்படுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

(மாவனல்ல)
மாவனல்லையில் முஸ்லிம் சிங்களமக்களிடையே இடம் பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பாக விரைந்துநடவடிக்கை எடுக்குமாறு தற்போதுவெளிநாடுசென்றுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கிம் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவிடம் அவசரவேண்டுகோள்விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளில் இச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புகொண்டு வேண்டியநடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்;

இதனையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸ்மாஅதிபருடன் தொடர்புகொண்டுநடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன [வ)

## உடைக்கப்படும் தபால்கள்

(நமது நிருபர்)
வெளிநாடுகளில் உள்ளவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தம்உறவினர்களுக்கு அனுப்பும் தபால்கள் உடைக்கப்பட்ட நிலையில் கிடைப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள் (8ஆம் பக்கம் பார்க்க)

## குமாரதுங்கவின் சிலை அமைப்பு
## இரண்டு அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வருவர்

(யாழ்ப்பாணம்)
ஜனாதிபதிசந்திரிக்காகுமாரதுங்காவின் கணவர் அமரர் விஜயகுமாரதுங்காவின் உருவச்சிலை அமைப்பதற் கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில நடைபெறவுள்ளது
(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சிறப்புபடைபிரிவு மட்டுவுக்கு. அனுப்பிவைப்பு

(லண்டன்)
தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறப்புப் படைப்பிரிவான ஜெயந்தன் படைப்பிரிவு புலிகளின் தலைமைப் பீடத்தால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அனுப்பிவைக் (8ஆம் பக்கம் பார்க்க)

## கவசவாகனம்தடம்புரண்டு நால்வர்பலி;எண்மர்காயம்

[மட்டக்களப்பு)
மட்டக்களப்பு பொலநறுவை பிரதானவீதியில் மியாங்குளம்எனும்இடத்தில் நேற்று மாலை வேகமாக வந்த இராணுவ கவச வாகனம் தடம் புரண்டதில், அதில் பயணம் செய்தநான்குஇராணுவச் சிப்பாய்கள் ஸ்தலத்தில் பலியாகினர். எண்மர் படுகாயங்களுடன் பொலநறுவை வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

வாழைச் சேனையிலிருந்து வெலிகந்த இராணுவ முகாமிற்கு வந்து கொண்டிருந்த கவச வாகனமே இவ்வாறு விபத்திற்குள்ளானது. (இ)

## புலிகளை நம்பாததாலேயே அரசு யுத்த நிறுத்தம் செய்யவில்லை
## அமைச்சர் அனுருத்த தெரிவிப்பு

(கண்டி)
தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த 4மாத காலமாக ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வந்த போதும் அவர்கள் மீது அரசுக்கு நம்பிக்கை இன்மையாலேயே அரசுயுத்தநிறுத்தம் செய்யவில்லையென்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல்அனுருத்தரத்வத்த நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது, கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது;

விடுதலைப்புலிகள் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்துவந்த 4மாத காலத்திலும் நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்து யுத்தத்திற்கான ஆயத்த வேலைகளில் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர்.

எதுவாயினும் ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சகலமுயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

இத்தகைய சமாதானமுயற்சிக்காகவே நோர்வே ஈடுபாடுபட்டு வருகிறதென்றும் அமைச்சர் ரத்வத்த மேலும் கூறியுள்ளார். (ம)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

5ஆம் வட்டாரம் நெடுந்தீவு என்னும் முகவரியைச் சேர்ந்த நடராசா அனிதா என்பவரது தே. அ. அட்டை (இல 827810932 V) வி.அ. அட்டை (இல 0914001100) ஆகிய இரண்டு அடையாள அட்டைகளும் தவறவிடப்பட்டுள்ளது. (நேற்றைய மே தின விழாவில்) கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். முரளி வீடியோ சென்ரர் சன்னாதிட்டி றோட் யாழ்ப்பாணம்.

சன்மானமாக ரூ 500 வழங்கப்படும்.

(2988)

## சைக்கிள் ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சண்டிலிப்பாய் பிரிவினர் நடாத்தும் யாழ். மாவட்டத்திற்கு உட்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 00 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-10)

## நியமனக் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் (ச. தொ. ச) கடந்த 4 வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 28 ஊழியர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் நேற்றைய தினம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் வைத்து கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குகேந்திரனால் வழங்கப்பட்டன. (உ-6)

## இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டு உத்தியோகத்தர்களையும் நாளை வெள்ளிக்கிழமை யாழ் செயலகத்தில் காலை 9 00 மணிக்கு வந்து சந்திக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (உ-10)

# சமூக உயர்தர விழுமியங்களுக்கு
# கவிஞர்கள் அடிநாதமாக விளங்க வேண்டும்

### 'வலம்புரி' கவிதைக் குடும்ப அங்குரார்ப்பண விழாவில் தெரிவிப்பு

(அரியாலை)

வலம்புரியின் கவிதைக் குடும்ப அங்குரார்ப்பண நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் வலம்புரி கேட்போர் கூடத்தில் உதவி ஆசிரியர் கவிஞர் துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு மூத்தகவிஞர் கலாநிதி இ. முருகையன் பிரதம விருந்தினராகவும், முன்னாள் கல்விப் பணிப்பாளர் கவிஞர் கோ. சி. வேலாயுதம், கவிஞர் இயல்வாணன், வலம்புரி நிர்வாக இயக்குநர் வெற்றிவேலாயுதம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

கலாநிதி இ: முருகையன் இந்நிகழ்வில் உரையாற்றுகையில்;

உயர் இலட்சியத்தை அடைய வேண்டுமானால் தனித்த ஒரு பார்வை வேண்டும். மனம் என்னும் வடிகட்டியினூடாக அது வெளிப்படும்போது சமூகத்தின் உயர்தர விழுமியங்களுக்கு அடிநாதமாக அமைகிறது. கவிஞர்களுக்கு இயல்பாகவே இது அமைகிறது

பட்டறிவின் பகுத்தறிவின் மூலம் மற்றவரின் உணர்வுகளைப் பெற்று வேடிக்கையோடு விரைந்து பாடுகின்ற பொழுது அதுதனித்துவமான கலையாக மிளிர்கிறது.

கலை தனியே தத்துவ ஞானமாகவோ விஞ்ஞானமாகவோ ஆர்பாட்ட போர்ப் பாடல்களாகவோ இருக்கக் கூடாது.

சமூகத்தின் பல்வேறு தளங்களையும் அது தொடக்கூடியதாக இருக்கவேண்டும். இளங்கவிஞர்கள்பன்மொழித் தேர்ச்சியின் மூலமும் நம் தமிழில் மிளிர்ந்த இலக்கியச் செம்மல்களின் வழியைப் பின்பற்றியும் தமது ஆற்றல்களை வெளிக் கொணர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் கோ. சி. வேலாயுதம் உரையாற்றுகையில்;

கவிஞனுக்கு ஏனையோரின் பார்வையிலும் பார்க்க ஒரு வித்தியாசமான பார்வை உண்டு. கவிஞர்கள் இந்த நாட்டில் பெருக வேண்டும். அவர்கள் சமூகத்தை, நாட்டை, வீட்டைப், பார்க்க வேண்டும். உணர்வு உள்ளத்தை தட்ட வேண்டும். நாடறிந்த நல்ல கவிஞர்களாக உலகில் மிளிர இந்நிகழ்வு ஒருகால்கோளாக அமைகிறது.

பகுத்தறிவுப் பாசறையில் நின்று கொண்டு உள்ளத்து உணர்வுகளை செய் அல்லது செத்துமடி என்ற வீறாப்பு கொள்கின்ற பொழுது ஆக்கமும் ஊக்கமும் நிறைந்த மனிதர்களாக சமூக, சமயக கடந்த பண்பாளர்களாம் மிளிர முடியும் என்றார்.

கவிஞர் இயல்வாணன் வலம்புரி ஆசிரியர் பீடத்தினர் உட்படபிரமுகர்கள்பலர் உரை நிகழ்த்தினர்.

(க-59-12-106)

## கோப்பாய்
# ஆசிரியர் கலாசாலைக்கு 200 பேர் மட்டுமே தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு புதிய கல்வியாண்டில் 200 மாணவர்களே தெரிவு செய்யப்படவுள்ளதாக கலாசாலை அதிபர் பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற இக் கலாசாலைக்கு மாணவர்களைத் தெரிவதற்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றிய 316 பேரில் சேவை மூப்பு, க பொ.த உ/த, சா/த பரீட்சைகளில் பெற்ற பெறுபேறுகள் என்பவற்றின் அடிப்படையில் 200 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடைய விபரங்கள் கல்வியமைச்சிற்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இவ் 200 பேரில் ஆரம்பக்கல்விக்கு 100 பேரும் சித்திரத்திற்கு 18 பேரும், மனையியலுக்கு 14 பேரும், சமயத்திற்கு 9 பேரும் நடனத்திற்கு 3 பேரும் மற்றும் தமிழுக்கு மிகுதிப் பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-2)

## மருதங்கேணி
# வைத்தியசாலையை மணற்காட்டில் இயக்குக

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிவைத்தியசாலையை மணற்காட்டுப் பகுதியில் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் சுகாதார அமைச்சிற்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளனர்.

மேற்படி கடிதத்தில்மாகாண சுகாதரப் பணிப்பாளர் எமது பகுதியை திட்டமிட்டு புறக்கணித்து வருகின்றார்;

எமது மக்கள் படும் அவலங்களை நேரில் வந்துபார்த்தால் மாத்திரமே உணர முடியும்;

இந்த நிலைமை ஓரளவுக்காவது மாற வேண்டுமாயின் இப்பகுதியில் வைத்தியசாலை இயங்குவது அவசியம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-43)

# வடமராட்சி கிழக்கு வளம் பேணும் சங்கம் அமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கின் வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன், வடமராட்சி கிழக்கு வளம் காக்கும் சபை என்ற பெயரில் ஒரு சபை அமைக்கப்படவுள்ளது.

இப்பகுதி புத்திஜீவிகளும் மதத் தலைவர்களும் தொழிலாளர்களும் இணைந்து இச் சபையை அமைக்கவுள்ளனர்.

இச் சபை இப்பகுதி மண் வளத்தையும, வன வளத்தையும் பாதுகாக்க ஏற்ற நடவடிக்கை எடுக்கும் என மத குரு ஒருவர் தெரிவித்தார்.

(உ-43)

### மெய்வல்லுநர்போட்டி

தெல்லிப்பழைப் பிரதேச சபையின் அனுசரணையுடன் அளவெட்டி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் ஞாயிறுக்கிழமை மல்லாகம் சிறிபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் காலை 8. 00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன; (உ-10)


## வலி-கிழக்கு பிரதேச சபையால் நாடத்தப்படும்
# விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்-2001

**இடம்** :- நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானம்

**காலம்** ;- 06-05-2001 ஞாயிறு பி ப2 00மணி

**தலைவர்** :- திரு. பூ. குணசிங்கம்(ஜே பி.யு.எம்) (தவிசாளர், வலிகிழக்கு பிரதேச சபை)

**பிரதம விருந்தினர்** :- திரு. து. வைத்திலிங்கம் (மேலதிக அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்)

**சிறப்பு விருந்தினர்** :- 1; திரு; க; மணிபல்லவராஜன் (தலைவர், நல்லூர், பிரதேச சபை)

2. திரு: க. கேதீஸ்வரன் (பிரதேச செயலர், கோப்பாய்)

3. திரு. ரி. வி: கிருஸ்ணசாமி (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்)

4; திரு. ஐ: சிறிரங்கேஸ்வரன் (தலைவர், பருத்தித்துறை பிரதேசசபை)

5. திரு. ஏ. டபிள்யூ: அரியநாயகம் (தலைவர் நெடுந்தீவு பிரதேச சபை)

6. திரு. என்; திரிலோகநாதன் (தலைவர். வலிமேற்கு பிரதேச சபை சுழிபுரம்)

**கௌரவவிருந்தினர்** :- 1. திரு. சோ: விசுவலிங்கம் (அதிபர், அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி)

2; திருமதி ஏ. எப்: ஜே. ரூபசிங்கம் (மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

**குறிப்பு**;- நடைபெற்று முடிந்த சைக்கிலோட்டம், மரதனோட்டப் போட்டிகளிற்கான பரிசில்களும் வழங்கப்படும்:

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**விளையாட்டுக் குழு, வலிகிழக்கு பி, சபை நீர்வேலி**

(கி-1898)



## கேள்வி அறிவித்தல்

சமீபத்தில் இவ்வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட பிரித்தானிய அரசின் நன்கொடையான குளிரூட்டியைப் பொருத்திஅதைஇயங்கவைப்பதற்கானகேள்விகளை தகுதி வாய்ந்தோரிடம்இருந்து கோரப்படுகிறது குளிருட்டியின் மொடல் FSX 145 2: 1587 கேள்விகள் 19. 05 2001காலை10. 30வரை ஏற்றுக்கொள்ளப்படும்குளிரூட்டியைபணிப்பாளரிடம்தொடர்புகொண்டு காரியாலய நேரத்தில் பார்வையிட முடியும். கேள்வி விண்ணப்பங்களமுத்திரையிடப் பட்ட கவரில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்;

பணிப்பாளர்
வைத்தியகலாநிதி
(செல்வி) நவமலர் கனகரட்டினம்

(கி/1900)



## அறிவித்தல்

**விஞ்ஞானபீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

அடுத்தஅரையாண்டுக்குரிய விஞ்ஞான பீட விரிவுரைகளும் செயன்முறை வகுப்புக்களும் 2001.05.09 (புதன் கிழமை) ஆரம்பமாகும்

**பதிவாளர்**


## பிரிவுத் துயர் பகிர்வு

### சுப்பையா சந்தையா

நல்லூர் சட்டநாதர் வீதியை வதிவிடமாகக் கொண்ட சுப்பையா கந்தையா அவர்கள் 1-5-2001 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் அன்று பி.பகல் 3 00 மணியளவில் செம்மணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்ட தென்பதை அறியத்தருகின்றேன்.

தகவல் -
பாலசுப்பிரமணியம்
மகன்

அக்கினிச் சுவாலை 1

# படை நடவடிக்கையில் ஏற்பட்ட உயிரிழப்பின் முழுப்பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அக்கினிச்சுவாலை-1 படை நடவடிக்கையின் போது அரச படைகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு முழுப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சிதெரிவித்துள்ளது.

இக் கண்டனத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர்காமினி அத்துக்கோறளை கடந்த திங்கள் விடுத்த அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் வெளியிடப் பட்டிருந்ததாவது.

சமாதான சூழலில் அரசால் மோதல் ஆரம்பித்து பல இழப்புக்களைச் சந்தித்துள்ளது.எனவே அரசாங்கம் யுத்த நடவடிக்கைகளை ஒரு புறத்தில் வைத்துவிட்டு உடனடியாக சமாதானப் பேச்சு வார்த்தையைஆரம்பிக்க வேண்டும்.

இதேவேளை அக்கினிச் சுவாலை தோல்வி யைத்தழுவியது மட்டுமல்லாமல்இழப்புகளையும் சந்தித்துள்ளது என்று சிரேஷ்ட அமைச்சகள் ஜனாதிபதியை சந்தித்து தெரிவித்துள்ளதுடன் இத்தகைய தொரு படை நடவடிக்கை தேவை இல்லை என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது .(வ

## சாரமரம் வீழ்ந்ததில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் கட்டடவேலையில் ஈடுபட்டிருந்த சமயம் சாரமரம் சறுக்குப்பட்டு கீழே வீழ்ந்ததில் மூவர் காயமடைந்த நிலையில் யாழ் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வை தவராசா(வயது 38) உருப்பிராய், த.ரவிச்சந்திரன் உடுவில் (வயது25) தி.சசிகரன் சுதுமலை (வயது 21) ஆகிய மூவருமே காயமடைந்த நிலையில் யாழ். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் அண்மையில் நாகவரதநாராயணர் ஆலயத்தில் இடம் பெற்றுள்ளது. (செ-10)

## அரச ஊழியர்களுக்கு ஜூன்மாத இறுதியில் சம்பள உயர்வு

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன்மாத இறுதியில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக தொழில் அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு பொரளை கம்பல் மைதானத்தில் இடம்பெற்ற மேதினக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் சம்பளத்திட்டம் தொடர்பாக ஆராய்ந்துவரும் சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்தமாத இறுதியில் அரசாங்கத்திற்கு கையளிக்கப்படும்.

அதன் பின்னர் அரசஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ)

## பெற்ற கடன் தொகையை மீளத் திருப்பிசெலுத்தவும்

[மந்திகை]

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் வர்த்தகத்தை விஸ்தரிப்பதற்காக சங்கத்தால் வழங்கப்பட்ட கடன் தொகையை சிறு தொகையாக மீளளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தில் கடன் பெற்றவர்களுக்கான கூட்டம் கடந்த 29 ஆம் திகதி தலைவர் இராசரத்தினம் ஜெயபாலன் தலைமையில் இடம் பெற்றது.

சங்கத்தினரால் வழங்கப்பட்ட கடன் தொகை முழுமையாக செலுத்தவேண்டும். சங்கத்தினுடைய யாப்பின் பிரகாரம் மாதாந்தம் 3 ஆயிரம் ரூபாவும் 18% வட்டியும் செலுத்தப்படல் வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ளஅசாதாரண சூழ்நிலையில் யாப்பமைப்பினை சற்று தளர்த்தி மாதாந்தம் 800 ரூபாவும் $7\frac{1}{2}$% வட்டியும் செலுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. (க-27)

## கலாசாலை மாணவர் மூலச்சான்றிதழ் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்களில் 92 ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான மூலச் சான்றிதழ்கள் பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளதாக கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆண்டு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் 91 ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றி இதுவரை மூலச் சான்றிதழ்களைப் பெறாத மாணவர்களும்தமது சான்றிதழ்களை அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளும்படியும் அவர் அறிவித்துள்ளார். (உ-2)

## யாழ். குடாநாட்டில் மரம் நடுகை இயக்கம் விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பாரிய மரம் நடுகை இயக்கம் ஒன்றினை வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் பேரில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த மரம் நடுகை இயக்கத்திற்குரிய சகல ஆரம்ப ஏற்பாடுகளையும் யாழ். செயலகம் ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் பருவகால மழையுடன் ஆரம்பிக்கப்படவுள்ள மரம்நடுகை இயக்கத்தின் போது வேம்பு, தேக்கு, சமண்டலை ஆகியவற்றுடன் பழ மரக்கன்றுகளும் குடாநாடெங்கும் நாட்டப்படவுள்ளன. (உ)

## புலிகளும் அரசும் பேச முன்வர வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில்நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரும்முகமாக விடுதலைப்புலிகளும் அரசும் பேச்சுவார்த்தைக்கு முன் வரவேண்டும்.

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணி பொதுச் செயலர் வாசுதேவ நாணயக்கார மேதினக் கூட்டத்தில்பேசுகையில் தெரிவித்துள்ளார்.

சிங்கள இனவாதிகள் நாட்டை அழிப்பதற்கு இடமளிக்கக் கூடாதுஎனவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலக நடமாடும் சேவை இன்று

(மானிப்பாய்)

வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் நடமாடும் செயலக சேவை இன்று காலை 9 மணி முதல் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இச் செயலக சேவையில் பெரிய விழான் மார்சீசன் கூடல், இளவாலை, முள்ளானை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் தமது குறை நிறைகளை எடுத்துரைக்கலாம். (உ-120)

நிர்வாக சேவைக்கு ஆட்சேகரிப்பு

## வடக்கு-கிழக்கில் ஒரே நேரத்தில் பரீட்சை

(கொழும்பு)

நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய போட்டிப்பரீட்சைகள் வடக்கு-கிழக்கில் ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும் என கல்குடா முஸ்லிம் பட்டதாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் வடக்கிலுள்ள 144 நிர்வாகசேவை வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய போட்டிப்பரீட்சையை நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கிழக்கில் அதிக வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் இப்பரீட்சை நடாத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே,வடக்கிலும் கிழக்கிலும் ஒரே நேரத்தில் பரீட்சை இடம்பெற வேண்டும் என சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ-3)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தென்கோவை கற்பகப்பிள்ளையார் ஆலயவருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பதினைந்து நாட்கள் திருவிழா நாடைபெற்று 20 ஆம் திகதி இரதோற்சவமும் 21 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (செ)

## யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் ஒரு வருடப் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஒரு வருடப் பூர்த்தி விழா எதிர்வரும் 15 ஆம் திகதி பீடாதிபதி தி. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கல்வியியற் கல்லூரிகளுக்குப் பொறுப்பான ஆணையாளர் நிஹால் தேரத் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கல்வியியற் கல்லூரியின் ஓராண்டு பூர்த்திவிழா மலரான முருகு வெளியீடும், கல்வியியற் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நிகழவுள்ளன. தொடர்து 16, 17, 18 ஆம் திகதிகளில் ஆரம்ப இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான கல்வி சம்பந்தமான தொடர் கண்காட்சி ஒன்றும் நடைபெறவுள்ளது. (க-02)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் நுணசை அருள்மிகு ஸ்ரீமுருகமூர்த்தி ஆலய இரதோற்சவம் வரும் 6 ஆம் திகதியும், தீர்த்தோற்சவம் 7 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (செ)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் அபிவிருத்திச் சபைக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு ப 10 மணிக்கு கரவெட்டி ரலனற்கல்விநிலையத்தில் நடைபெறவுள்ளது.

மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் கூட்டத்திற்குக் தவறாது சமூகம்தருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (உ)

## பாம்பு கடித்து பாலகி பலி

(யாழ்ப்பாணம்)

பாம்புக் கடிக்குள்ளாகிய பச்சிளம் குழந்தை பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் புத்தூர் கிழக்குப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சந்திரன் சாலினி எனும் ஒரு வயதுக்குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது (உ-104)

## லக்ஷார்ச்சனை

(ஆவரங்கால்)

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய தசமதின லக்ஷார்ச்சனை இன்று நடைபெறவுள்ளது

காலை சங்காபிஷேகமும் மாலை லட்சநாம பூர்த்தியும் பஞ்சமுக விநாயகப்பெருமான் திருவீதி உலா வரும் காட்சியும் இடம் பெறவுள்ளது. (செ-57)

## சாரணர் தலைவர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சாரணர் தலைவர்களுக்கான கூட்டம், வரும் ஞாயிற்றுக்கிழமை மு ப 9 30 மணிக்கு திருநெல்வேலி அரசினர் விவசாய பயிற்சிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

நியமன ஆணைப்பத்திரம் பெறவிருக்கும் சாரணர் தலைவர்கள சீருடையுடன் சமூகம் தரவேண்டும் என மாவட்ட ஆணையாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (உ)

## இறுதிப் போட்டிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

பதினேழு வயதிற்கு கீழ்ப்பட்ட பிரிவு(ஆண்கள்) கரப்பந்தாட்டப போட்டியில் யாழ். மாவட்டமட்ட இறுதிப்போட்டிக்கு யாழ். ஆனைக்கோட்டை பால்சுப்பிரமணிய வித்தியாலயம், யாழ் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன. (உ)

## மின்சாரம் வழங்குக

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பகுதிக்கு மின்சாரம் வழங்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பன் குடத்தனை,மணற்காட்டுப் பகுதி மக்களே மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-43)

# மின் ஒழுங்கு விதிகளுக்கிணங்கச் செயற்பட்டு விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

சி. மகேந்திரராஜன்
தொழிற் திணைக்களம்
யாழ்ப்பாணம்

மின்சாரம் வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும் தேவைகளினைப் பூர்த்திசெய்யப் பாவிக்கப்படுகின்றது. மின்சாரத்தினை அவதானமாகப் பாவிக்காதுவிடில் உயிராபத்து ஏற்படக்கூடும். எனவே மின்சாரம்பாவிக்க முன்னர் அதற்கு உரிய பாதுகாப்பு மின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய மின் இணைப்புத் தொகுதிக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கின்றதா என்பதை பாவனையாளர் உறுதி செய்தல் வேண்டும்.

### உயிராபத்துக் காரணிகள்

★ மின் உபகரணம் பழுதாக இருத்தல்:
★ கசிவு மின்சாரம் மேலுறையில் பாயும் சந்தர்ப்பம் இருத்தல்.
★ மின்தொகுதியில் உள்ள பாதுகாப்பு உபகரணங்கள் மின்சாரத்தைத் துண்டிக்கத் தவறுதல்.
★ மனித உடலில் மின்சாரம் பாய்தல்.
★ மின்சாரத்தினால் தாக்கப்பட்டவரை அகற்ற ஆள் இல்லாதிருத்தல்
★ உரியமுதலுதவிச் சிகிச்சை அளிக்கத் தவறுதல். போன்றகாரணிகள் மூலம் மின்சாரத்தினால் பாதிக்கப்பட்டவருக்கு உயிராபத்தும் ஏற்படலாம்;

### உபகரணம் பழுதுபடல்

மின் உபகரணம் பழுதாக இருப்பதை மின் அளக்கும் கருவியின் மூலம் கண்டுபிடிக்கலாம் அவ்வாறு பழுது இருப்பின்அனுபவமுள்ள மின் திருத்துநரைக் கொண்டு திருத்தல் வேண்டும்.

### மேலுறையில் மின் பாய்தல்

மின் உபகரணங்களின் மேலுறைகள் உலோகத்தினால் செய்யப்பட்டிருந்தால் கசிவு மின்சாரம் மேலுறையில் பாயும் சந்தர்ப்பம் உண்டு. விஞ்ஞானம் முன்னேற ஒரு சில மின் உபகரணங்களிற்கு மின்னைக் கடத்தாத பிளாஸ்ரிக் மேலுறைகள் பாவிக்கப்படுகின்றன.

### துண்டிக்கத் தவறுதல்

எல்லா மின் இணைப்புத் தொகுதிகளிற்கும் பாதுகாப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலதிக சுமைக்கும், புவிக்கசிவு ஏற்படும் சந்தர்ப்பங்களிற்கும் மின்சக்தியினைத் துண்டிக்க உருகிகளும், புவிக்கசிவு மின் ஆளி (Earth Lea Kege Ciruit Breaker ஆகியவை உள்ளன மின் சுற்றின் சுமைக்கு ஏற்றவாறு ஒவ்வொரு மின் சுற்றிற்கும் ஒழுங்குவிதிகளிற்கு அமைய உருகிகள் இணைக்கப்படல் வேண்டும். அவ்வாறு அமையாவிடில் மின் சுற்றிற்கு அபாயம் விளைவிக்கும் மின்சாரம் பாயும்பொழுதும் மின்சக்தி துண்டிக்கப்படாது. இதனால் தீவிபத்தும் ஏற்படும் சந்தர்ப்பம் உண்டு. புவிக்கசிவு ஆளி இயங்குகின்றதா என அடிக்கடி அதில் உள்ள மஞ்சள் பொத்தானை அழுத்திப் பார்க்க வேண்டும் அவ்வாறு அழுத்தும் பொழுது மின் சக்தி துண்டிக்கப்படாதுவிடில் அனுபவமுள்ள மின் திருத்துநரைக் கொண்டு சீர் செய்தல் வேண்டும்.

### உடலில் மின்சாரம் பாய்தல்

மின்சாரத்தைப் பாவிக்கும் பொழுது இறப்பர் போன்ற மின்கடத்தாத காலணிகளைப் பாவிக்கத் தவறும் போது, மனித உடலில் மின்சாரம் பாயும் சந்தர்ப்பம் உண்டு. மேலும் மனிதஉடல் ஈரலிப்பாக இருந்தால் கூடிய அளவு மின்சாரம் பாயச் சந்தர்ப்பம் உண்டு.

### தாக்கப்பட்டவரை அகற்ற ஆளின்மை

மின்சாரத்தினால் தாக்கப்பட்டவரை மின் சுற்றில் இருந்து பாதுகாப்பாக காய்ந்ததடி போன்ற மின் கடத்தாத பொருட்களால் அப்புறப்படுத்த வேண்டும், அவ்வாறு இல்லாதுவிடின் காப்பாற்றுபவரும் அபாயத்திற்கு உள்ளாக வேண்டி வரும்.

### உரிய முதலுதவி

மின்சாரத்தினால் தாக்கப்பட்டவரை பாதுகாப்பாக அப்புறப்படுத்திய பின்னர் அவர் நினைவிழந்திருந்தால் உரிய முதலுதவியினைவழங்க வேண்டும். நினைவிழந்தவரின் சுவாசம்தடைப்படலாம். இருதயம் இயங்காது இருக்கலாம். ஆகவே அவரின் இருதயம் இயங்குவதற்கு இருதயம் இருக்கும் இடத்தில் அதிர்ச்சி கொடுக்கும் விதத்தில் அடிக்கலாம். அனுபவம் உள்ளவர்களே இதைச்செய்ய வேண்டும்.

அத்துடன் செயற்கைச் சுவாசம் வழங்குதல் வேண்டும். முதலுதவி வழங்குபவர் பொறுமையை இழக்கலாகாது. மின்சாரத்தினால் தாக்குண்டவருக்கு மூன்று மணித்தியாலங்களுக்குப் பின்னரும் நினைவு வந்தசந்தர்ப்பம் உண்டு. நினைவு இழந்தவரிற்கு முதலுதவி செய்து நினைவு வந்தபின்னர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும்;

இறுதியாக மின்சுற்று நிறுவப்படும் பொழுது தகுந்த மின் பொருட்களைப் பாவிப்பதுடன், சிறந்தமுறையில் மின்வேலைகள் செய்யப்படல் வேண்டும் என்று மின்ஒழுங்கு விதிகளில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

---

## கல்வி அலுவலகம் வைத்தீஸ்வராவில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அதிகாரி அலுவலகம் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் தற்போது இயங்கி வருகிறது.

வேம்படி மகளிர் கல்லூரியில் இயங்கி வந்த இக்காரியாலயத்தைச் சம்பிரதாய பூர்வமாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

(து)

## இராசி பலன்

03/05/2001
(சித்திரை 20, வியாழன்)
ஏகாதசி பி இ 2.11வரை
பூரம் மாலை 5.46 வரை
இராகுகாலம் 1.26- 2.56
நல்லநேரம் 7.26- 8:56
சித்தம்.

**மேடம்**
மனக்கவலை, உஷ்ண வியாதி, காரிய இடைஞ்சல், தொழில் முயற்சி.

**இடபம்**
தன்னம்பிக்கைக் குறைவு, கல்வி மேன்மை, முயற்சிதாமதம், அற்பர் நேசம்.

**மிதுனம்**
காரிய நன்மை, சகோதரர் உதவி, வாக்கு மேன்மை, இனிய சம்பவம்;

**கடகம்**
பொருள் விரயம், விதண்டாவாதம், கௌரவக் குறைவு. காரிய தாமதம்;

**சிங்கம்**
தெய்வ சிந்தை, அமைதி நிலை, காரியவெற்றி, ஆழ்ந்த சிந்தை.

**கன்னி**
சுபகாரியச் செலவு, வீண் அலைச்சல், கோபப்படுதல், நித்திரைக் குறைவு.

**துலாம்**
கீர்த்தி, முயற்சி கைகூடும்; மனமகிழ்ச்சி, தனலாபம்.

**விருச்சிகம்**
நல்ல செய்தி, முயற்சி கைகூடும், சந்தோசமான நிகழ்வு, உத்தியோக நன்மை.

**தனுசு**
வயிற்றுக் கோளாறு, அச்சமான நிலை, கட்டுப்பாடு. காரிய தாமதம்.

**மகரம்**
எதிர்பாராத பிரச்சினை, வியாதி, மனக்குழப்பம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
காரிய நன்மை, போசன சுகம், பிரயாணம், தனலாபம்.

**மீனம்**
தொழில் விருத்தி, சந்தோசமான நிலை, எதிரிகள் விலகுவர், காரிய நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது)

வளவன்

---

# உரிமைகளை வென்றெடுக்க இவ் உன்னததினத்தில் ஒன்றுபடுவோம்

## மே தினத்தில் மாவை அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

அரசு போரை நிறுத்தி புலிகளுடன் பேச வேண்டும் இல்லையேல் மக்கள் எதிர்ப்பியக்கம் ஒன்றை ஆரம்பிப்போம்.

நேற்று முன்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேதினக் கூட்டம் இணுவில் கந்தசுவாமி கோவில் முன்றலில இடம் பெற்ற போது அதில் உரை நிகழ்த்தி யயாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பி.ப 2.30 மணிக்கு கூட்டணி உறுப்பினர் ச.முத்துலிங்கம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில்அவர்தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்;

தொழிலாளர் தினமான இந்நாள் உழைக்கும் வர்க்கங்களின் உன்னத நாள்.

இந்நாளில் தொழிலாளர் உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும். உழைக்கும் மக்களின் இன்னல்கள் தீர்க்கப்பட வேண்டும்.

இன்றைய நாளில் நாம் எல்லோரும் அணி திரண்டு எம் உரிமைகளை வென்றெடுக்க உறுதி பூண வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில், கூட்டணி உறுப்பினர்கள் உட்பட பெருந்தொகையான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

(உ-6)

## காலைச் சேவை ஆரம்பம்

(கல்வயல்)

பருத்தித்துறைக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையிலான 767 ஆம் இலக்க பேருந்து சேவையின் இரவு தங்கல் சேவை, சில மாத இடைவெளியின் பின்மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவை காலை 7.00 மணிக்கு வட்டுக்கோட்டையில் இருந்து ஆரம்பமாகி நவாலி, மானிப்பாய், மருதனார்மடம், சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், புத்தூர், தொண்டைமானாறு, இமையாணன், குஞ்சர்கடை, நெல்லியடி ஊடாக பருத்தித்துறையைச் சென்றடைவது குறிப்பிடத்தக்கது.

(உ-111)

## 17 இலங்கையர் கட்டாறில் சிறை

(கொழும்பு)

போதைவஸ்துப் பாவனை மற்றும் கொள்ளைச்சம்பவங்கள் தொடர்பாக 17 இலங்கையர் கட்டாறில் சிறைத் தண்டனை அனுபவித்து வருவதாக கொழும்பில் செயற்படும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களுள் பலர் 10 வருடங்களிற்கு மேல் சிறைத் தண்டனை பெற்றவர்கள் என்றும் 13 பேர் போதை வஸ்துப் பாவனையினால் சிறைத்தண்டனை அனுபவிப்பதாகவும் வேலை வாய்ப்பு பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

(க-04)

## வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்வின் பின்னரேயே வீதி திறப்பு சாத்தியம்

### பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கண்டி தலதாமாளிகைக்கு எதிராகவுள்ள வீதி,வடக்கு கிழக்கு பிரச்சினை தீர்க்கப்பட்டபின்னரே,மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்படும்.

கடந்த சனிக்கிழமை கண்டியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் தலதாமாளிகையை பாதுகாப்பது அரசின் பிரதான கடமை அதனடிப்படையில் தலதா மாளிகைக்கு அச்சுறுத்தலாகவுள்ள மேற்படி வீதியை மக்கள் பாவனைக்காகத்திறந்து விடுவதற்குவடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து யுத்தத்துக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகுமென்று ரத்வத்த கூறினார்.

இதேவேளை, மேற்படிதலதா மாளிகைக்கு எதிராகவுள்ள வீதி பல வருடங்களாக மூடிக் கிடப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

## மாணவிகள் மீது இளைஞர்கள் சேஷ்டை

(மந்திகை)

தனியார் கல்வி நிலையத்திற்கு செல்லும் மாணவிகள் மீது சேஷ்டை விட்ட இளைஞர்களை அப்பகுதி மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி கிழவி தோட்டம் பிள்ளையார் கோவிலடிப்பகுதியில் நடைபெற்ற சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நீண்ட நாட்களாக மாணவிகள் வகுப்புக்கு செல்லும் வேளை அட்டகாசங்கள் தாங்க முடியாததையிட்டு பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து அவர்கள் கூடி சம்பவம் நடைபெற்ற வேளை கையும் மெய்யுமாக மடக்கிப் பிடித்ததுடன் பெற்றோர்கள் முன்னிலையில் எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

(க-23)

## மாவட்ட மட்ட சாதனை

(துன்னாலை)

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க கல்வி உத்தியோகத்தராக கடமை புரியும் பெரியதம்பி இராஜமனோகரன், பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஈட்டி எறியும் போட்டியில், 49.10 மீற்றர் தூரம் ஈட்டிஎறிந்து மாவட்ட மட்டத்தில் சாதனை புரிந்துள்ளார்.

(உ-41)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தென்கோவை கற்பகப்பிள்ளையார் ஆலய பிராயச்சித்த கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

(செ)

## இன்று ஒரு தகவல்

### அன்பை அன்பால்பெறவும்

துறவியிடம் வந்த ஒருவன் 'சாமி என் மனைவியின் தொல்லை தாங்க முடியவில்லை. எந்நேரமும் என்னுடன் சண்டை போட்டுக் கொண்டே இருக்கிறாள். அவளோடு ஒத்துவாழ இனி என்னால் முடியாது. அவளை விட்டுப் பிரிந்து நான் அவளுக்குத் துன்பம் தரவேண்டும். தாங்கள் தான் எனக்கு வழி காட்டவேண்டும்' என்று வேண்டினான். 'நீ உண்மையாகவே உன் மனைவிக்குத் துன்பம் தரவேண்டும் என்று நினைக்கிறாய், அப்படித் தானே' என்று கேட்டார் துறவி. 'ஆமாம்' என்றான் வந்தவன். 'நீ இப்பொழுது உன் மனைவியைப் பிரிந்து செல்வதால் அவள் துன்பப் படுவாளா? மகிழ்ச்சி அடைவாளா?' என்று கேட்டார் அவர். 'சொல்ல முடியவில்லை. அவள் மகிழ்ச்சி அடைந்தாலும் அடையலாம்' என்றான் அவன்.

'நான் சொல்கிறபடி செய், இன்றிலிருந்து மூன்று மாதம் உன் மனைவி என்ன செய்தாலும் அவள்மீது அன்பைக் கொட்டு. அதன் பிறகு நீ அவளைப் பிரிந்தால் அவள் துன்பப்பட்டே ஆகவேண்டும். மூன்றுமாதம் கழித்து உங்கள் வீட்டிற்கு வருகின்றேன். சரிதானே' என்றார் அவர். வந்தவனும் அப்படியே செய்வதாகச் சொல்லி விடைபெற்றான். மூன்று மாதம் கழிந்தது. துறவி அவன் வீட்டிற்கு வந்தார்: 'என்ன இப்பொழுது பிரிந்து செல்லத் தயாராக உள்ளாயா' என்று கேட்டார்.

'துறவியாரே! நான் எதற்காக என் மனைவியை விட்டுப் பிரியவேண்டும், நானும் அவள் மீது உயிரை வைத்திருக்கிறேன். அவளும் என் மீது உயிரையே வைத்திருக்கிறாள், நீங்கள் சொன்னபடி அவள் மீது அன்பு காட்டிய போதுதான் அவள் என் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் என்றுஅறிய முடிந்தது. இனி எங்களுக்குள் பிரிவே வராது தாங்கள் செல்லலாம்' என்றான் அவன். தன் எண்ணம் நிறைவேறிய மகிழ்ச்சியில் துறவியும் அங்கிருந்து புறப்பட்டார்.

— பேராசிரியர் எ. சோதி

# தொண்டர் ஆசிரியருக்கான விசேட அறிவுறுத்தல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொண்டர் ஆசிரியராக சேவையாற்றிக் கொண்டிருப்போருக்கு நேர்முகப்பரீட்சையின்போது கோட்டக் கல்வி அதிகாரிகளும் பிரசன்னமாயிருக்க வேண்டும் என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். என். தணிகாசலம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

மேற்படிநேர்முகப்பரீட்சை வலயரீதியாக இன்று முதல் 11ம் திகதிவரை நடைபெறும் என்றும்பரீட்சார்த்திகள் பின் வரும்ஆவணங்களுடன்சமுகம் கொடுத்தல் அவசியம்என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

★ தேசிய அடையாள அட்டை

★ பிறப்புச் சான்றிதழ்

★ க.பொ.த (சா/த)பெறு பேற்றுச் சான்றிதழ்

★ க.பொ.த (உ/த) பெறு பேற்றுச்சான்றிதழ்

★ தொண்டர் ஆசிரியராக சேவையாற்றுவதற்கு வழங்கப் பட்ட அனுமதிக் கடிதம்.

★ தொண்டர் ஆசிரியராக தொடர்ந்து இன்றுவரை சேவையாற்றிக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

★ தொண்டர் ஆசிரியர் சேவையை சிறப்பாக ஆற்றியமைக்கு அதிபர் அல்லது மேற்பார்வை அதிகாரியால் வழங்கப்பட்ட நற்சான்றிதழ்.

★ சேவையாற்றிய பாடசாலை அதிபரால் தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப் பட்ட தினவரவுச்சான்றிதழ்.

★ அதிபரால் ஆசிரியருக்கு வழங்கப்பட்ட நேரசூசி (இது வலயக்கல்விப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப் பட்டிருத்தல் வேண்டும்)

★ சேவையாற்றிய ஒவ்வோர் ஆண்டிலும் பாடசாலையில் நிலவிய ஆசிரிய ஆளணி வெற்றிட விபரம் (அதிபரினால் பெற்று சமர்ப்பிக்கவேண்டும்)

நேர்முகத் தேர்வின் போது குறித்த தொண்டர் ஆசிரியருடன் அவர் சேவையாற்றிக் கொண்டிருக்கும் பாடசாலையின் அதிபர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவரும் நேர்முகத் தேர்வுக்குழு முன்னிலையில் தோற்றவேண்டும் (அழைப்புக்கடிதம் அதிபருக்கு அனுப்பப்படவேண்டும்) இவரினால் பின்வரும் ஆவணங்கள்சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

★ தினவரவுப் கையொப்ப பதிவேடு

★ தினவரவு இடாப்பு

★ பாடப்பதிவேடு

★ புள்ளிப்பதிவேடு

★ பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டக் குறிப்பு என்பவற்றுடன் தொண்டர் ஆசிரியர்களை சமுகம் கொடுக்குமாறு எஸ் என். தணிகாசலம் பிள்ளை கேட்டுக்கொள்கின்றார் (க-10)

## யுத்த முயற்சிகள் கைவிடப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தமது சொந்த மண்ணில் சமாதான சுகவாழ்வு வாழ்வதற்கு ஏதுவாக அரசு தனது யுத்த நடவடிக்கைகளை கைவிட்டு சமாதான முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு தீவுப் பகுதி சனசமூக நிலையம் மேதினத்தையொட்டி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் மக்கள் இன்று தம் அடிப்படை உரிமைகளைக் கூட இழந்து, சொந்த நாட்டிலும், பிற நாடுகளிலும் ஏதிலிகளாக அலைந்து திரிகின்றனர். தமிழர்களிற்கு இலங்கை எங்கும் துன்புறுத்தல்கள், கைது, சித்திரவதை, கொலை, பாலியல் வல்லுறவு என்பன தொடர் நடவடிக்கையாகவுள்ளன.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது [க]

## தேங்காய் வியாபாரி படையினரால் கைது

(மந்திகை)

வரணியைச் சேர்ந்த தேங்காய் வியாபாரி ஒருவர் நெல்லியடியில் வைத்து படையினரால் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப் பட்டுள்ளார்.

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்தவல்லிபுரம் இலங்கேஸ்வரன் (வயது-33) என்பவரே கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவராவார்.

இவரது கைது தொடர்பாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவிடமும் நெல்லியடி ஈ.பி.டி.பி அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. [ந-10-23-5]

## பத்து தினங்கள் கழித்து கிடைத்த கடுகதி தபால்

(சுண்டுக்குளி)

யாழ். குடாநாட்டில் கடுகதி தபால் சேவை தொடர்ந்தும் நத்தை கதியிலேயே இடம்பெறுவதாக பொதுமக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையில், கடந்த 18 ஆம் திகதி கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் அனுப்பப்பட்ட கடுகதி தபால், பத்து தினங்கள் கழித்து இம் மாதம் 28 ஆம் திகதியே வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-110)

## வடபகுதி மாணவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்க ஜனாதிபதி அங்கீகாரம்

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் சுமார் 9 ஆயிரம் மாணவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்கும் திட்டத்திற்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

முதற் கட்டமாக ஆறு மாதங்களுக்கு இத் திட்டம் அமுல் நடத்தப்படும் என்றும் பின்னர் படிப்படியாக விஸ்தரிக்கப்படும் என்றும் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தமிழ் விவகாரங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ் அமைச்சு மேலும் தெரிவிக்கையில்;

வடபகுதியில் உள்ள சுமார் 9 ஆயிரம் மாணவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்குவதற்காக போதிய விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் பாடசாலை மட்டத்தில் திரட்டப்படும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் கிடைக்கப் பெற்றதும் உடனடியாக ஊட்டச்சத்து வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் தொடரும் யுத்தஅதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருவதாகவும் இதனால் இவர்களது குடும்பத்திற்கு போதிய வருமானமின்மை காரணமாக ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதை ஜனாதிபதியிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனையடுத்து அமைச்சர் மாணவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்கும் திட்டம் ஒன்றினை முன் வைத்திருந்தார்.

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் வவுனியா வடக்கு கல்வி வலயப்பகுதியில் இடம்பெயர்ந்து வாழும் மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்காக சென்ற வருடம் நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாவை வழங்கியிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ் வருடம் வடக்கின் புனர்வாழ்வு அதிகாரசபை ஊடாக இத்திட்டத்தை தொடர நிதி வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [க]

## இளைஞனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளிப் பகுதியைச் சேர்ந்த மரியதாஸ் பிரபாகரன் (வயது21) என்ற இளைஞனை கடந்த 28.4.2001 தொடக்கம் காணவில்லை என மனித உரிமைஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யபபட்டுள்ளது.

இவர் நியூ அம்பாள் இலத்திரனியல திருத்தும் கடையில் வேலை செய்பவர் எனவும் சம்பவ தினம் காலை 6.00 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்ட போது பருத்தித்துறை செல்வதாகக் கூறியவர் இன்னும் வீடு திரும்பவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## நினைவு தினமும் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதரின 180 ஆவது ஜனன தினமும் நினைவுப் பேருரையும மேற்படி நூல் நிலையமண்டபத்தில் நாளை பிற்பகல் 1.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் ப.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். மேற்படி நிகழ்வில் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம, கவிஞர் இ.முருகையன், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி உப-அதிபர் கலாநிதி தா.அமிர்தலிங்கம் உட்பட பலர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

பட்டிமன்றம், வில்லிசை நாடகம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (க)

## பொ. ஜ. ஐ.முன்னணியின் மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்குபற்றவில்லை

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஆகிய இருவரும் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பு ஹம்பல் பூங்காவில் இடம் பெற்றஅரசின் மேதினககூட்டத்தில்சிரேஷ்ட அமைச்சர்களான அலவி மௌலானா, தினேஷ் குணவர்த்தனா, பௌஸி. சுசில் பிரேமஜெயந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் மேதினக் கூட்டத்தில் சுமார் 50 ஆயிரம் மக்கள் கலந்து கொண்டதாகவும், பாதுகாப்புக் கருதியே ஜனாதிபதியும், பிரதமரும் கலந்து கொள்ளவில்லை என்றும தெரிவிக்கப்பட்டுளளது. (வ)

## புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்கு

(யாழ்பபாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கம் நடாத்தும் புதிய கல்விச் சீர் திருத்தம பற்றிய கருத்தரங்கும, கலந்துரையாடலும் யா/கொககுவில் இந்துககல்லூரியில் வரும் 8 ஆம திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00மணி முதல பி.ப.3.00 மணிவரை இடம்பெறவுள்ளது

சா.தியாகலிங்கம் தலைமையில் இடம்பெறவுளள இக்கருத்தரங்கில்,

புதிய கல்விச்சீர்திருத்தங்கள் பற்றிய பொதுநோக்கு எனும தலைபபில முதுநிலை விரிவுரையாளர் எப சின்னத்தம்பி,

பாடசாலை மட்டக் கணிப்பீடு எனும பொருளில் ஓய்வு பெற்ற அதிபர் அ பஞ்சலிங்கம்,

கல்விச்சீர்திருத்த அமுலாக்கலில் ஜதார்த்த நிலை எனும் தலைபபில அதிபர் ப.முதது லிங்கம்,

ஆசிரியர் தரக் கணிப்பீடு என்ற விடயம் பற்றி அதிபர் க.நடராசா ஆகியோர் கருத்துரை நிகழ்த்துவர். [உ]

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 25ஆம் திகதி மேற்கொளளப்பபட்ட அக்கினிச் சுவாலை. இராணுவ நடவடிக்கை முறியடிப் பின் போது, உயிரிழந்தவர்களின் பெயர் விபரம வருமாறு

லெப்.கலைத்தருவி (குமாரசாமி நந்தினி) யாழ்ப்பாணம்.

லெப.தூவாணி (சாந்தீபன் நந்தினி) மன்னார்.

லெப். முஜேதினி (தில்லையம்பலம் சத்தியபாமா) உடையார்கட்டு.

கப்டன். பூங்குழலி (மாயவன் புவனறது) யாழ்ப்பாணம்.

செந்தமிழ் (தெய்வேந்திரம் கமலஜோதி) யாழ்ப்பாணம்.

2ம். லெப். கடைவிழி (டொண்பொஸ்கோ டிறெகசனா யாழ்ப்பாணம்.

பிறை (செல்லையா தனலட்சுமி) மல்லாவி,

கப்டன். நிலா/இறைச் செல்வி (பாலசாமி மங்கம்ளஸ்வரி) கொழுமபு.

லெப். (ப்ளேவதி (இரத்தின சிங்கம சரத்னா) யாழ்பபாணம்.

ஆகிய போராளிகள் தமது தரபபில் உயிரிழந்துளளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ-5)

## தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடாததும தமிழ்விழா எதிர் வரும 5 ஆம திகதி சனிக்கிழமை தொடககம 13 ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை வரையும நடைபெறவுளளது. (செ)

## எல்லைப் பேச்சு வார்த்தைக்கு
# பங்களாதேஷிற்கு இந்தியா அழைப்பு

(புதுடில்லி)

எல்லைப் பிரச்சினை தொடர்பான பேச்சு வார்த்தைக்கு முன்வரும் படி பங்களாதேஷிற்கு இந்தியா அழைப்பு விடுத்திருக்கிறது.

புதுடில்லியிலுள்ள பங்களாதேஷ் தூதுவர் மூலம் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பேச்சு வார்த்தைகள் இந்த மாதம் இருபத்தைந்தாம் திகதி புதுடில்லியில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வரும் வேளையில், இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பேச்சு வார்த்தையை சற்றுத்தள்ளி வைக்கும்படி பங்களாதேஷ் கோரியிருக்கிறது.

அண்மையில் எல்லைப்புறக் கிராமத்தில் இந்தியத்துருப்புக்கள் பதினைந்துபேர் கொல்லப் பட்டதையடுத்தே இப் பேச்சு வார்த்தைக்கு இந்தியா அழைப்பு விடுத்திருகிறது.

பேச்சு வார்த்தைகள் 1974 ஆம் ஆண்டு எல்லை தாவா உடன் படிக்கையின் அடிப்படையில் தான் நடைபெற இருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சு செய்தியாளர் தெரிவித்தார். (து)

## நீண்ட இடைவெளியின் பின் கொரியாக்கள் இணைந்து மேதினக் கொண்டாட்டம்

(சியேலா)

இரண்டு கொரியா நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்கள் மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் மேதினக் கொண்டாட்டத்தை ஒன்றாகச் சேர்ந்து கொண்டாடியுள்ளனர்.

இரண்டு கொரியாக்களும் 1945ஆம் ஆண்டில் பிரிந்து போனதற்குப் பின்பு, இம்முறையே ஒன்றாகச் சேர்ந்து மேதின நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-9)

### பாகிஸ்தான்
# பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக அமெரிக்கா கண்டனம்

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஊக்குவித்து வருகின்றதென அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்க அரசாங்கம் பயங்கரவாதம் தொடர்பாகவெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அமைப்பிற்கு இராணுவ ஆலோசனைகள், ஆயுதம் எரிபொருள், நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப உதவி என்பவற்றை வழங்கி வருகிறது.

ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வரும் தலிபான் அமைப்பில பெரும் தொகையான பாகிஸ்தானிய மக்கள் இடம் பெற அரசு அங்கிகாரம் வழங்கியுள்ளமை கண்டிக்கப்படத்தக்கது எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது

அத்துடன் காஷ்மீரில் இடம் பெற்று வரும் தீவிரவாத நடவடிக்கைகளுக்கும் பாகிஸ்தான் உதவி அளித்து வருவதாகவும் அமெரிக்க அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது. (உ-9)

## அமெ. இரகசியங்களை சீனா அபகரித்து விட்டது
### பென்டகன் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

ஹவானாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்காவின் ஈ பி-3 ரக விமானத்தில் இருந்து பலஇரகசியங்களை சீனா அபகரித்து விட்டதாக அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது

சீனாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் விடுவிக்கப்பட்ட அமெரிக்க வீரர்கள் வழங்கிய தகவலை அடுத்தே சீனாவின் இவ் அபகரிப்பு விடயம் வெளியாகியுள்ளதாக பென்டகன் மேலும் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 1ஆம்திகதி சீனக் கடலில் ஏற்பட்ட விமான விபத்தையடுத்து உடனடியாகத் தரையிறக்கப்பட்ட அமெரிக்க விமானத்தின் ஊழியர்களே மேற்படித் தகவல்களை வழங்கியுள்ளனர். (க-9)

## அமெரிக்க ஜனாபதி நேச நாடுகளுடன் பேச்சு
### அடுத்தவாரம் இடம்பெறும்

(மொஸ்கோ)

அமெரிக்காவின் தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் தொடர்பாக அந்நாட்டு ஜனாதிபதி புஷ் அடுத்த வாரமளவில் நேச நாடுகளுடன் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் தொடர்பாக நேச நாடுகள் கொண்டுள்ள அதிருப்தி நிலையைச் சீர் செய்யும் முகமாகவே நேச நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுக்களில் புஷ் ஈடுபடவிருக்கின்றார்.

இதேவேளை ரஷ்யா, சீனா உட்பட மத்திய ஆசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டாக இணைந்து அமெரிக்காவின் இப்பாதுகாப்புத் திட்டத்திற்கு எதிராகக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

அக் கண்டன அறிக்கையில் தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தை முன்னெடுக்கும் வாஷிங்டனின் யோசனையை தாம் எதிர்ப்பதாகவும் கண்டங்களுக்கிடையிலான ஏவுகணைகளைத் தடைசெய்யும் ஏ. பி. எம். ஒப்பந்தத்திற்கு தாம் ஆதரவு வழங்குவதாகவும் இவ் ஒப்பந்தத்தை அலட்சியம் செய்யும் நடவடிக்கைகளைத் தாம் கண்டிப்பதாகவும் அந் நடவடிக்கைகள் நாடுகளின் பாதுகாப்பிற்கும் சமாதானத்திற்கும் பாரிய அச்சுறுத்தலாக அமைவதாகவும் குறிப்பிடப்பட்டுளளது. (க-02)

### இந்தியப்பிரதமர்
## மலேசியா விஜயம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் இம்மாதம் 13 ஆம் திகதியளவில் மலேசியா செல்லவிருக்கிறார்.

நாட்டின் அபிவிருத்தி தொடர்பான விவகாரங்கள் பற்றிப் பேச இவர், மலேசியா செல்லவுள்ளார் என்று வெளியுறவு அமைச்சரின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பயணம் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி அதிகரிக்குமெனவும், இவ்விரு நாடுகளுக்கும் இடையில் புதுவித உறவு ஏற்படும் வாய்ப்பு உளளதென்றும அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-7)

## ஜனாதிபதி மாளிகைக்குள் ஆர்ப்பாட்டக்காரர் அத்துமீறி நுழைய முயற்சி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் தலை நகர் மணிலாவில்உள்ள ஜனாதிபதி மாளிகையை, உடைத்துக் கொண்டு அத்து மீறி நுழைய முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை அந்நாட்டுப் பொலிஸார் அடக்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன;

ஊழல் குற்றச் சாட்டுக்களுக்காக சிறையில் உள்ள எஸ்ராடாவினை விடுதலை செய்ய வேண்டுமெனக் கூறியே மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் அதிபர் மாளிகையுள் நுழையமுயற்சித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் நடைபெற்ற மேற்படி ஆர்ப்பாட்டங்களின் போது குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை. தனது ஆதரவாளர்களான ஆர்ப்பாட்டக்காரர்களை குழப்ப நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் ஜோசப் எஸ்ராடா வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-9)

## உலக அரங்கில் நிகழ்ந்த மேதின கலகங்கள்

★ மேதின ஊர்வலங்களை நடாத்த இருந்த 500 பேரை பாகிஸ்தான் அரசு கைது செய்த போதும் அங்கு மேதின எழுச்சிக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

★ ஜேர்மனியின் தலைநகர் பேர்ளினில் ஆர்ப்பாட்டக்காரர்கள, சாலைகளைமறித்து நின்ற போது அவர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி பலரைக் கைது செய்துள்ளனர்.

★ அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பங்குச் சந்தை ஒன்றை நோக்கி வீதி ஊர்வலம் சென்ற போது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்துள்ளனர்.

★ லண்டனில் பிரதான வர்த்தக நிலையம் ஒன்றை ஆக்கிரமித்த மேதின ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு பல சேதங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

★ இந்தியாவில் மேதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் தமது சுதந்திரங்களை வலியுறுத்தும் வகையில் ஆடைகளைக்களைந்து விட்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். (உ-9)

## உலக தரிசனம் - 9
## அறிவுப் போட்டியில்
### பாராட்டுப் பெறுவோர் விபரம்
(தொடர்ச்சி)

வல்லிபுரம் குலேந்திரன்
கைதடி தெற்கு, கைதடி.

ஜி. சுகந்தி
குறோசற்லேன், சுண்டுக்குளி.

இராசதுரை ராஜதீபன்
நாவற்குழி, தச்சன்தோப்பு.

பிரம்மஸ்ரீ ச. க. சுதர்சனக்குரு
சிவன் கோயிலடி, ஆவரங்கால்.

அருந்ததி செல்வநாயகம்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

சர்வேஸ்வரன் அபிராமி
சிவன் வீதி திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

திருமதி சகலகலாதேவி பேரானந்தம்
கொக்குவில்.

சிவலிங்கம் நிரஞ்சன்
பலாலி றோட், யாழ்ப்பாணம்.

ப. கேதீஸ்வரன்
1ம் வட்டாரம், நெடுந்தீவு.

செ. விநாயகமூர்த்தி
[மெடிஸ்கோ] கச்சாய் வீதி, சாவகச்சேரி.

வேலாயுதம் சுபாசினி
நந்தசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.

யோகராசா ஜெகதீஸ்வரி
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

## ஐ.நா உணவு விநியோகம்

(லண்டன்)

கடந்தமூன்று ஆண்டுகளாக கடும் வரட்சியால் வாடும் 7 லட்சத்துக்கும்அதிகமான எரித்திரியன் மக்களுக்குஒருவருடத்திற்கு தேவையான 90ஆயிரம் தொன் உணவுப் பொருட்களை வழங்க ஐ.நா. முன்வந்துள்ளது.

நேற்று ஆரம்பமான இப்பணி உலக சுகாதார நிறுவனத்தின் கோரிக்கையின் பேரிலே நடைமுறைக்கு வந்துள்ளது. (உ-7)

# அரசியல் கூட்டங்கள் நடத்த பாகிஸ்தானில் முற்றாகத் தடை
### நகர் பலத்த பாதுகாப்பில்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் அரசாங்கம் நேற்றுமுன்தினம் முதல் அரசியல் கூட்டங்களுக்குத் தடை விதித்துள்ளது

இந்த உத்தரவை மீறி எதிர்க் கட்சிகள் நகர் பூங்காவில் கூட்டத்தை நடத்த எத்தனித்தன.

இதனை அறிந்த பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பூங்காவை முற்றுகையிட்டுக் கதவுகளை மூடியுள்ளனர்.

நகரிலும் பூங்காவைச் சுற்றியும் கலகம் அடக்கும் நூற்றுக்கணக்கான பொலிஸாரும் இராணுவத்தினரும் காவல்புரிகிறார்கள். (து)

உண்ணற்க கள்ளை உணில்
உண்க சான்றோரான்
எண்ணப்பட வேண்
டாதார்.
- குறள்

வலம்புரி

## பெற்றோரின் கடமையே

யுத்தம் நமக்குத் தந்த பரிசுகளில் ஒன்று கலாசாரச் சீரழிவு. கால காலமாகக் கட்டிக் காக்கப் பட்டு வந்த தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் இன்று தடம் புரண்டு விட்டது. கேட்போர் யாருமின்றி இளைஞர் குழாம் புகைத்தல், மது பானம், போதை வஸ்து பாவனை என்றுநிலைமை எல்லை கடந்து போவ வதைக் காணமுடிகிறது.

நேற்று முன்தினம் மே தினக் கொண்டாட்டங் களுக்காக ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தது. ஆங்காங்கே நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. எம் இளைஞர் சமூகத்தின் எல்லை கடந்த - நெறி தவறிய பழக்க வழக்கங் களை நேரில் காண முடிந் தது.

பன்னிரண்டுவயது நிரம் பியவர்கள் கூட இருட்டுக் களில் இரண்டு, மூன்று பேரெனக் கூடியிருந்து புகைத்துக் கொண்டிருந் தனர். இன்னொரு பகுதி யில் மது வெறி தலைக் கேறி தள்ளாடும் நிலை யில் ஒரு பகுதியினர். இவையெல்லாவற்றிற்கும் மேலாக மதுபானத்திற்கு அறிமுகமாகிய புதியவர் களின் எண்ணிக்கை தாராளம்.

என் செய்வது தாய், தந்தையர்கள் வாய் திறந்து கதைக்க முடி யாத -அறிவுரை கூறமுடி யாத அளவிலேயே இருக் கின்றனர். பிஞ்சில் பழுத் தால் மரம்காய்த்ததில் எந் தப்பலனும்இருக்க முடியா தல்லவா.

ஒரு புறத்தில் யுத்த அழிவுகள், மறு புறத்தில் திருடர்களின் தொல்லை கள் இப்படியே தமிழினம் இடைஞ்சல் படும்போது தமிழினத்தின் பாரம்பரி யத்தை - கலாசாரத்தைக் கட்டிக் காக்க வேண்டிய இளைஞர் சமூகம் குடி கும்மாளம் எனத் தம் எதிர்காலத்தைச் சீரழித் தால் தமிழினத்தின் எதிர் காலம் கேள்விக் குறியாகி விடும்.

பிள்ளைகளின் போக்கை- அவர்களின் நடத்தை களைக் கண்டும் காணா மல் இருப்பது வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்லதல்ல. சிறு பராயம் முதல் நல் ஒழுக்கங்களை, சீரிய பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுப்பதன் மூலமேகட்டிளமைப்பரு வத்தில் ஏற்படக் கூடிய பிறழ்வுகளைத் தடுக்க முடியும். இல்லையேல் பெற்றதால் கண்ணீர் என்றாகி விடும்.

# தெய்வீகப பாதைக்கு இட்டுச் செல்லுகின்ற

# சாயி நிறுவனங்களின் கண் காட்சி நிகழ்வுகள்

சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை மூல மாக சமூக தெய்வீக சன் மார்க்க நெறியில் மக்களை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வரும் சாயி நிறுவனங்களின் மேம்பாட்டுத் திட்டங்களி னால் உருவாக்கப்பட்ட கண் காட்சியும் சாயியின் ஆன்மீக நெறிகளும் அடங்கிய நிகழ்ச் சிகள் மானிப்பாய் இந்து மக ளிர் கல்லூரியில் நடைபெறு கின்றன. பெரியவர்கள் மட்டு மல்ல பாடசாலைச் சிறுவர்க ளும்இவற்றைப்போய்ப்பார்த் துதம் வாழ்வை வளத்துடன் வாழப் பழகிக்கொள்ளலாம். பாபாவின் தெய்வீகப்பாதை யில் எல்லோரும் சென்று ஆன்மீகத்தை வளர்த்து இன் புறுமாறு கேட்டுக் கொள்கின் றோம்.

மலரும் சாயி யுகத்தில் நாம் எல்லோரும்காலடிவைப் போம் என்று உறுதி பூணு வோம்:

### உள்ளுறை தெய்வீகம்

மனித குலத்திற்கு வரப் போகும் விபத்து தவிர்க்கப் பட்டுவிடும். புதிய பொற் காலம் உருவாகும். அவதாரங் கள் தங்களது பணிகளில் எப் போதும் தோல்வி கண்ட தில்லை. நானும் என்பணியை சாதித்தே தீருவேன் இப்ப டிக் கூறுகின்றார்: பாபா. சத் தியம், தர்மம், சாந்தி பிரேமை அஹிம்சை இவை கள் எல்லாம் உள்ளுறை தெய் வீகம்.

தான் விதைத்த விதை முளைவிட்டு வளர்ந்து பய னைக் கொடுக்காவிட்டால் ஓர் உழவன் எப்படி வருந்து வானோ அது போலவே என் னுடைய சத்திய வாக்குகள் என்னும் விதைகள் உங்கள் நெஞ்சமாகிய நிலத்தில் ஊன்றி வேர்விட்டு நன்றாக வளர்ந்து மரமாகி இறை உணர்வு என்னும் பழத்தை தராமல் வீணானால் நானும் வருந்துவேன். இந்த ஒரு கைங் கரியத்தை மட்டும் நீங்கள்

**கே. ரி. சிவராஜா**
(யாழ்ப்பாணம்)

எனக்கு ஆற்றினால் போதும். இதைவிட வேறொன்றும் உயர்ந்த பணியாக இருக்க முடியாது. உங்களின் பொருட்டே எழுதிய இந்தச் சொற்களைப் புறக்கணித்து விடாதீர்கள். அவைகளைச் செயல் முறையில் கைக் கொண்டு போற்றி நீங்கள் அனுபவிக்கும் ஆனந்தமேஎன் உணவாகும். அப்படி எனது சொற்படியே ஒழுகி அவை களை உங்கள் அன்றாட வாழ் விலும் கைக்கொண்டு செயல் புரிந்தால் மேலும் உங்களுக்கு அனேகம் சொல்வேன். நான் இதற்காகவேவந்தவன். இந்த நிமிடத்திலிருந்து நீங்கள் எதற்கும் ஆசைப்பட்டு அதன் பின்னால் போகவேண்டாம். எல்லாரையும் கடவுளாகப் பார்த்து சலனமற்று அன்பு டன் உங்கள் கடமையைச் செய்யுங்கள். அமைதியாக இருந்து கொள்ளுங்கள் நேரம் வரும்போது எல்லாம் உங்க ளுக்குத் தரப்படும்.

### மாணவ மணிகளுக்கு

மாணவ, மாணவிகள் நம் நாட்டின் எதிர்கால குடிமக் கள். அவர்கள் மூலமாகத் தான் எங்களுடைய கலாசா ரம் நிலைபெற்றுத் திகழமுடி யும். அந்நாளில் நாட்டில் அநியாயம், அக்ரமம், அனாச் சாரம், அத்யம் ஆகியவை எங் கும் நிறைந்து தாண்டவமா டுகின்றன. ஆகவே மாணவர் கள்தான் சாந்தமான இருத யத்தோடு நல்ல எண்ணங் களோடு வாழ்க்கையில்அவற் றைக் கடைப்பிடித்து இத்த கைய சமூகத் தீமைகளை அழிக்க கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும். அதற் காக மாணவ மாணவியர் ஆனந்தமாக வாழ வழி செய் யும் வண்ணம் மனித உயர் குண நலன்களை வளர்த்துக் கொண்டு வாழ்க்கை நடத்த முயற்சி எடுக்கவேண்டும். சத்தியத்தையும் தர்மத்தை யும் உணராத மனிதன் எங்க னம் தனது உண்மைஇயல்பை தெரிந்து கொள்ளமுடியும் ஆகவே முதலில் மனிதன் தன்னிடம் இருக்கும் சத்தியத் தையும் தர்மத்தையும் நேசிக் கக் கற்றுக் கொள்ளவேண் டும். இதைத்தான் நாட்டின் கலாசாரமாக மதிக்கமுடி யும். சத்தியமும் தர்மமும் சாந்தியும் பிரேமையும் உன் னிடத்தில் இல்லையெனில் உனது கல்வி அனைத்தும் வீணாகும் என்பதைப்புரிந்து கொள்ளமுடியும் மாணவ மாணவிகள் இக்கண்காட்சி யைப் பார்வையிடும பட்சத் தில் உங்கள் கடமையுணர் வும் தொண்டுள்ளமும் நிலைக்கும் என்பது உறுதி. தங்களிடம் செல்வம் குறை வாகஇருப்பதாகச் சிலர் எண் ணிக் கவலைப்படுகிறார்கள், ஏன் கவலைப்பட வேண்டும். செல்வத்திலே சிறந்த செல் வம் தெய்வப்பிரேமையே. தெய்வத்தின் மேல் அன்பு என்கிற தனத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். அன்பை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ளுங்கள் பலருக்கு உதவி புரியுங்கள். யாராக இருந் தாலும் சரி அவருக்கு உத வுங்கள். பகவான் விருப்புவது நீங்கள் படித்து நல்ல பெயர் எடுக்கவேண்டும் நீ எனக் காக எதுவும்பாடுபடத் தேவையில்லை. ஆனால் உனக்காக எதுவானாலும் சரி சுவாமி பாடுபடத் தயராக இருக்கிறார் மாணவமணி யர்களே எல்லோரிடமும் அன்புசெலுத்துங்கள். அதுவே பகவானுக்குச் செய்யும் சேவையாகும் அன்பே கடவுள். அன்புடனே வாழ் வோம்''.

**மறைந்தார் மாண்பு**

# ஹாட்லியின் புகழ் பூத்த அதிபர்

# கணபதிப்பிள்ளை பூரணப்பிள்ளை

1909 ஒக்ரோபர், 30 இல் இம் மண்ணுலகில் தோன்றி 2001 ஏப்ரல் 22 இல் உலகை விட்டு நீங்கிய ஹாட்லியின் அதிபர் கணபதிப்பிள்ளை பூரணம் பிள்ளை அவர்களின் சேவை களைமனத்தில்இருத்திஅவரை நினைவு கூருகின்றோம்.

சிறப்புடைய நூற்றாண்டு என்பது நிறுவன வரலாற் றிலே ஒரு துளி தனிமனித மரபிற்கு ஒரு யுகம்.

''யுகமாய் வாழ்ந்த
ஒரு மனிதனைப்
பற்றிய நினைவுச்
சொட்டுக்கள் இதோ''

ஆங்கிலத்தாகம் தணிக்க பருத்தித்துறைக் கனவான் களின் வேண்டுதலில் பீற் றர் பேர்சிவலின் அர்ப்பணிப் பில் பருத்தித்துறையில் ஆரம் பமான வெஸ்லியன் மிசன் ஆங்கிலக் கல்லூரியின் அதி பர் மகன் பூரணம்பிள்ளை யாவார்.

சிறந்த முன்முயற்சியோடு கூடிய ஆரம்பிப்பாளரான சரட்டின் வழியில் பாட சாலையின் வளர்ச்சிப் பாதையை சிறப்புறத் தீர் மானித்து அமைத்து உட் கட்டமைப்பை ஒழுங்கு படுத்தி ''ஹாட்லிக் கல்லூரி என நாமம் வழங்கி தேர்ச்சி பெற்ற பாடசாலை வளர்ச் சியாளரான சி. பி. தாமோ தரம்பிள்ளைக்கு நல் மாணாக்கன்: துறை ஆளுமையை சம நிலையாக வளர்க்க மேற் கொண்ட பல செம்மை சால் முயற்சிகள் தனித்து நினைக்கப்பட வேண்டியவை களாகும்.

### சாயி அருளமுதம்



இப்பொழுது எல்லோரும் சுகத்தையே நாடுகின்ற னர். சௌகரிய மான தொழில், செல்வாக்குள்ள பதவி என்பவற்றைத்தேடி அலைவது வங்கிகள்வியா பார ஸ்தலங்களை நிறுவு வதும், பெரிய பங்களாக் களை அமைப்பதும், சந் தோஷமாக வாழ்வதற்கு மனிதர் கொண்டுள்ளபேர வாவுக்குச் சான்று பகர் கின்றன. ஆனால் சாந்தியு டன் வாழ்வதற்கு அவர் இல்லை சுகமும், சாந்தியும் குழப்பமாகி அவை இரண் டும் ஒன்றெனத் தவறாகக் கருதப்படுகின்றன: மிகுந்த செல்வத்துடனோ, உயர்ந்த பதவியிலோ, செழிப்புடனோ, அதிகாரத்துடனோ வாழும் எவருக் கும் சாந்தி இல்லை. இதன் உண்மையை நீங்களே ஆராய்ந்து அறிந்து கொள்ளலாம். பணவைப்புப் புத்த கங்களிலோ, பல அறைகளைக் கொண்ட மாளிகை களிலோ, பொருட் களஞ்சியங்களிலோ, இரும்புப் பெட்டிகளிலோ சாந்தியைக் காணமுடியாது. உங்கள் மனோபாவம் முழுவதும் தலை கீழாகவே இருக்கின் றது.

நன்றி
**நாளாந்த நற்சிந்தனை**

**அதிபர், ஆசிரியர்கள்**
**மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்**
(ஹாட்டிலிக் கல்லூரி பருத்தித்துறை)

### பேர்மிங்காமில்

பட்டம் பெற்று ஆசிரிய ராகி கல்வி டிப்ளோமாவை இருப்புநகர் பெர்மிங்காமில் பாங்குடன் பெற்று ஆங்கி லப் பாணியில் மிடுக்குடன் திரும்பி அதிபராய்ப் பதவி ஏற்று பெருமகனார் ஆற்றிய பணிகள் பெருமிதமுடை யன.

அன்று மக்களின் மனங் கவர்ந்த பிரித்தானியாவின் இலக்கணப் பாடசாலை மரபுகளை தழுவி இயை வாக்கி எமது ஹாட்லியை இலங்கையின் ஹாட்லியாக் கிய சர்வதேச புகழ் உடைய பாடசாலையாக்கிய பூர ணத்தாரின் சால்பு நினைக் கப்பட வேண்டியது.

### தனித்து நினைக்க வேண்டியவை

மாணவர் தலைவர் அமைப்பு ஒழுங்குபடுத்தப் பட்ட பொதுக்கூட்டம், திட்டமிடப்பட்ட சீருடை, நூல் நிலைய அபிருத்தி, இணைப்பாட விதான அபி விருத்திகள் பல, கிரிக்கெட் உட்பட மாணவரின் பல் நேரம் தவறாமைச்சால்பு ஆசிரியர்களின் சிறந்த விழு மியம், பெற்றோரை ஆற்றுப படுத்தும் ஆற்றல், வடமராட் சியின் எபபகுதியிலும மாண வரின் ஒழுகலாற்றை ஒழுங் குறச் செய்த மேன்மை என்ப னவும் தனித்து நினைக்கப் பட வேண்டியனவாகும்.

காலை, மதிய வேளை களில் பாடசாலை ஆரம்ப மாகும் சந்தர்பபததில வகுப்பறை மேற்பார்வைக் காக 'டொக்' 'டொக' நாதத்துடன் வரும்அன்னா ரின் நடை பவனியும் தமது நினைவிற் கொளளத்தக்கன வாயுள்ளன

அதிபராய், விசேட ஆங் கில ஆசிரியராய், நண் னாய், அரசனாய், மந்திரி யாய், நல்ல பொலிஸ்கார னாய், தீர்க்கமான நீதிவான் ஆக விளங்கிய செம்மல்' தகப்பன் பெயர் கூறி மகனை ஆற்றுப் படுத்தும் கலைகளை விளக்கமாய் நடந்து முடிந்த செயல்கள் எல்லாம் நினைந்து இரங்குகின்றோம். அன்பிற் குரிய எம் அதிபரின் ஆத்ம விமோசனத்திற்காக ஆண்ட வனை வேண்டிப் பிரார்த் திக்கின்றோம்.

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்
மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1896)

## இராணுவ உதவிக்காக அமைச்சர் கதிர்காமர் அமெரிக்கா விஜயம்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் அமெரிக்காவின் புதிய அரசுக்கும் இடையிலான இராஜீக உறவுகளைப் பலப்படுத்த வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஒரு வார விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் அமெரிக்காவுக்கு பயணமாகியுள்ளார்.

வாசிங்டனில் தங்கியுள்ள அமைச்சர் சதிர்சாமர் அங்கு வெளிநாட்டமைச்சர் கொலின்பவல் மற்றும் அமெரிக்க அரசின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களில் ஈடுபடுவார்.

இருதரப்பு அரசியல், இராணுவ ரீதியான உறவுகளை பலப்படுத்துவதும் இராஜிக உறவுகளைப் பேணுவதுமே அமைச்சர் கதிர்காமரின் விஜயமென்று அமைச்சரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்கா, இலங்கைப் படையினருக்கு பயிற்சி மற்றும் இராணுவரீதியாக உதவிகளை வழங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த வாரம் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும் பிரதி நிதியமைச்சருமான ஜீ. எல். பீரிஸ் அமெரிக்காவுக்கு சென்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (இ)

## தென்னிலங்கையிலிருந்து 1200 யாத்திரிகர்கள் மடுத்திருப்பதி சென்றனர்

(வவுனியா)

தென்னிலங்கையில் இருந்து சுமார் 1200 கத்தோலிக்க யாத்திரிகர்கள் நேற்று இராணுவக் கட்டுப்பாடற்ற மடு தேவாலயத்திற்குச் சென்றுள்ளனர்.

இரத்தினபுரிமறைமாவட்ட ஆயர் அதிவண ரஞ்சித் மல்கம் தலைமையில் சுமார் 35 வாகனங்களில் இவர்கள் பறையனாளங்குளம் ஊடாக சென்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுச் சென்ற இவர்கள், அங்கு ஒரு வார காலம் தங்கியிருப்பர்.

எதிர்வரும் சனிக்கிழமை கத்தோலிக்க மக்களுக்கு விசேட தினமாக இருப்பதால் அத்தருணத்தில் மத அனுஷ்டானங்கள் மேற்கொள்வதற்காகவே இவர்கள் அங்கு சென்றுள்ளனர்.

கடந்த மாதம் ஆயர் குழு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனிடம் இப்பயணத்திற்கான அனுமதி பெறப்பட்டதாக ஆயர் ரஞ்சித் மல்கம் தெரிவித்துள்ளார். (ம)

### எரிக்சோல் ...

தையின் போது நோர்வே அரசினால் தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் மனிதாபிமானத்திற்கான அடிப்படைப் புரிந்துணர்வு என்ற வகையில் அதற்கு, ஜனாதிபதி சந்திரிகா பச்சைக்கொடி காட்டியிருப்பதாகவும், எனினும் யுத்தநிறுத்தத்திற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவிக்கவில்லை என்றும், ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பையடுத்து இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தியை இரண்டாவது தடவையாகவும் சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறிய எரிக்சோல் நேற்றிரவு நோர்வேக்குத் திரும்பினார். (வ)

## 26 சடலங்கள் அடக்கம்

அனுராதபுர ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் இனம் காணப்படாமல் வைக்கப்பட்டிருந்த 26 படையினரின் சடலங்கள் இராணுவமரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ந)

### பரராசசிங்கம் ...

னார்.

அவுஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழகத்தின் அழைப்பை ஏற்று அவுஸ்திரேலியா பயணமான பரராஜசிங்கம், அங்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களைச் சந்தித்து, இலங்கையில் இடம் பெறும்மனித உரிமைமீறல்கள் தொடர்பாக விளக்கமளிப்பார்.

அத்துடன் அங்குதமிழ்அகதிகள் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் கூட்டங்களிலும் கலந்து உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## போயாதின ஆன்மீக நிகழ்வுகள்

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் போயா தினமான 7 ஆம் திகதி திங்கட்கிழமை ஆன்மீக நிகழ்ச்சிகள் பல இடம் பெறவுள்ளன.

காயத்திரி மந்திரம் பஜனை பண்ணிசை, மற்றும் பேராசிரியர் என். ஞானக்குமரனின் ''புத்த பகவானின் போதனைகளின் சாரம்'' எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம் பெறும். (உ)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகியதங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1897)

## தப்பியோடும் படையினர் வெளிநாடுகளில் தஞ்சம்?

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் முகவர் நிலையங்களும் அவர்களுக்கு உள்ளூரில் வேலை வழங்குபவர்களும் தண்டிக்கப்படுவர் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாய் அறிய முடிகிறது.

இதுவரையிலும் படையிலிருந்து 25 ஆயிரம் பேர் வரை தப்பியோடியுள்ளனர் எனவும் இவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் எனவும் மேலும் தெரிய வருகிறது. (உ-5)

### புலிகளின் --

கப்பட்டுள்ளதாக அரசபுலனாய்வுப்பிரிவு தகவல்வெளியிட்டுள்ளதாக சர்வதேச செய்தி ஏஜென்சியொன்று தெரிவித்துள்ளது.

எட்டு வருடங்களுக்கு மேலாக யுத்தஅனுபவம் பெற்ற மிகவும் வலுவான போராளிகளால்கட்டமைப்பு பெற்ற தளபதி கருணாவின் தலைமையில் இயங்கும் மேற்படி ஜெயந்தன் படைப்பிரிவு மட்டக்களப்பு நகரில்பாரிய தாக்குதல்களை நடத்தும்நோக்கிலேயே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அரசபுலனாய்வு பிரிவுஅரசை எச்சரித்துள்ளதென அச்செய்திஏஜென்சி மேலும் தெரிவித்துள்ளது.

இப்படைப்பிரிவு மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில்உள்ள எல்லையோர கிராமப்பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளைமட்டக்களப்பு பகுதியில் என்நேரமும் பாரிய தொரு தாக்குதலைப் புலிகள் நடத்தலாமென இராணுவ ஆய்வாளர்கள் அச்சம்தெரிவித்துள்ளனர். (இ)

### சிங்கள ---

உள்ளனர். காயமடைந்தவர்கள் மாவனல்ல ஆதார வைத்தியசாலையில்அனுமதிக்சப்பட்டுள்ளனர்.

இச் சம்பவங்களை அடுத்து மாவனல்லை நகரில் நேற்று காலை 6 மணிமுதல் இன்று காலை6மணிவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவினால் பதற்ற நிலை சற்று தணிந்த போதும் மோதல்கள் எந்நேரமும்வெடிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இச் சம்பவங்களை அடுத்து பொலிஸ்மாஅதிபரின் உத்தரவின் பேரில் ஏழு பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட விசேடகுழுவொன்று அங்கு விரைந்துள்ளது.

இன விவகார அமைச்சர் அத்தாவுடசெனிவி ரத்தனதலைமையில் சமாதானக்கூட்டம் ஒன்று மாவனல்லை பிரதேச செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

இதனை அடுத்து நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் மாவனல்லை நகரம் இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் முழுக்கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை மாவனல்ல பகுதியில் முஸ்லிம் கடையில் கப்பம் வாங்க முனைந்த ஐந்து சிங்களவர்கள் நேற்று மாலைபொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ)

## களுத்துறை சிறைக்கு மாற்றம்

யாழ் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த கோண்டாவிலைச் சேர்ந்த மார்க்கண்டு சுதன் என்பவர் நேற்றைய தினம் விமான மூலம் களுத்துறைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட காலங்களில் மூன்று தடவைகள் தப்பியோடி பிடிபட்ட மேற்படி கைதி தொடர்பான விசரணைகளை கடந்தவாரம் சிறைச் சாலையில் நடாத்தியயாழ் மாவட்ட நீதிபதி இ. விக்கினராசா, 5 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் .களுத்துறை சிறைச்சாலைக்கு இடமாற்ற உத்தரவும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.6

## இருவர் விடுதலை

(கொழும்பு)

கண்டி தலதாமாளிகை குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் நேற்று உயர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ம)

### இரண்டு-.-

நாளைநண்பகல்நடைபெறவுள்ள அடிக்கல்நாட்டும்விழாவில் கலந்து கொள்வதற்காக கிராமிய தொழிற் பயிற்சி அமைச்சர் அமரசிறி தொடங்கொட, சமூகசேவைசள் வீடமைப்பு அமைச்சர் மேவின் சில்வாமற்றும்பிரதிப்பாராளுமன்ற குழுத்தலைவர் லலித் திஸநாயக்காஆகியோர்இன்று யாழ்ப்பாணம் வந்துசேருவர் எனஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [இ)

### உடைக்கப்படும்-.-

ளது.

உடைக்கப்பட்ட நிலையில் கிடைக்கப்பெறும் தபால்கள் ஸ்ரெப்ளர் செய்யப்பட்டு தபால் நிலையங்களூடாக விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ)

### பூவரசங் ...

கொண்டதாகவும் இதன் போது துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்ததாகவும்வன்னிச் செய்திகள்மேலும் தெரிவிக்கின்றன.

இதன்போது ஏற்பட்டசேத விபரங்கள் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (ம)

"We bring the world to your Home"
யாழ்.நகரில் முன்னோடி தொழில்நுட்ப நிறுவனமான
J. T. I. யும்
தென்னிந்தியாவில் 1,00000 மேற்பட்ட இல்லங்களை
கேபிள் ரீவி மூலம் இணைத்துள்ள
Sats Tech நிறுவனமும்
இணைந்து வழங்கும்
சீரிய தொழில் நுட்பத்துடன் கூடிய
சாட்டலைட் ரிசீவிங் சிஸ்டம்
(Satellite Receiving System)
இன்று முதல் யாழ்நகரில் நம்பமுடியாத குறைந்த விலையில்
தமிழ், இந்தி, ஆங்கில நிகழ்ச்சிகளை உங்கள் தொலைக்காட்சியில் துல்லியமான முறையில் கண்டு களியுங்கள். அனுபவம் உள்ள தொழில் நுட்பவியலாளர்களின் ஒருங்கிணைந்த விற்பனைக்கு பிந்திய சேவை மூலம் உங்கள் உபகரணங்களுக்கு பாதுகாப்பான தொழில்நுட்ப சேவையும் வழங்கப்படும்.
JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA
"QUALITY IS OUR MOTTO"
மேலதிக விபரங்களுக்கு:
Jaffna
Technical Institute
52|1, Stanley Road, Jaffna.
Phone: 3335
(கி-1894)

இப்பத்திரிகை "வலம்புரி" அங்கோ நிறுவனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 03ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது